தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.44/மா/2022**

**நாள்.31.05.2022**

செல்வி S. தேவிகா,
திண்டுக்கல் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி, திண்டுக்கல் – எதிர் மனுதாரர்

திண்டுக்கல், நெட்டுத்தெரு, முனிசிபல் காலனி, கதவு எண்.56-ல் வசிக்கும் செல்வி S. தேவிகா என்பவரின் 08.04.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2022 அன்று பெறப்பட்டு 44/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல், நெட்டுத்தெரு, முனிசிபல் காலனி, கதவு எண்.56-ல் வசிக்கும் செல்வி S. தேவிகா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 08.04.2022 நாளிட்ட தனது மனுவில், “திண்டுக்கல் நகராட்சியில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து காலமான என் தந்தை சுப்பன் தாயார் K.மாரி சென்னை உள்ளாட்சி நிதி தணிக்கையில் ஓய்வூதியம் பெற்று வந்தனர். மணமாகாத என்னை தாயார் K.மாரி கடந்த 07.11.20211 அன்று தவிக்க விட்டு காலமாகி விட்டார். அதனால் ஓய்வூதியர்களின் மணமாகாத மகளுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் கேட்டு விண்ணபித்தேன். பல ஆண்டுகள் தாமதிப்புக்கு பின் 2017ம் ஆண்டு குடும்ப ஓய்வூதியம் வழங்கவும், அதுவும் வருமான சான்று அடிப்படையில் தருவதாக தெரிவித்தது. ஓய்வூதியர்களை சார்ந்து வாழ்ந்த எனக்கு தனியாக என்ன வருமானம் இருக்க முடியும். ஆனால் வருமானச் சான்று 2017ல் பெற்றதால் தாயார் K. மாரி காலமான 07.11.2011 முதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கவில்லை. உள்ளாட்சி நிதி தணிக்கை எனக்கு இழைத்தது அநீதியாகும். அரசு ஆணையின்படி என் தாயார் K.மாரி இறப்பு 07.11.2011 முதல் உள்ளாட்சி நிதி தணிக்கை குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும். திண்டுக்கல் மாநகராட்சியில் குடும்ப ஓய்வூதியம் பெற உரிய சான்றுகளை மட்டும் பெற்று ஓய்வூதிய ஆணை வழங்குவது உள்ளாட்சி நிதி தணிக்கை பணியாகும். ஆகவே என் நியாயமான கோரிக்கையை விசாரணை நடத்தி என் தாயார் K. மாரி இறப்புக்கு பின் 07.11.20211 முதல 2017 வரை வழங்கப்படாத குடும்ப ஓய்வூதியம் கணக்கிட்டு தர உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு அறிவுறுத்த வேண்டும். அரசாணைகளை அமல்படுத்தும் பணியை செய்ய உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 26.04.2022 நாளிட்ட அறிவிப்பு(Notice) மூலம் கோரப்பட்டது.

ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி அவர்களிடமிருந்து அறிக்கை எதுவும் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்படவில்லை.

3) மனுதாரர் செல்வி S. தேவிகா மற்றும் ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி ஆகியோர் 23.05.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 11.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

4) மனுதாரர் 23.05.2022 அன்றைய நேரடி விசாரயையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" திண்டுக்கல் மாநகராட்சியில் எனது தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரும் துப்புரவுப் பணியாளர்களாக பணியாற்றி, பணியிடையே காலமானதைத் தொடர்ந்து, அவர்களது மகளான திருமணமாகாத நான், எனக்கு ஓய்வூதியம் அளித்திடுமாறு 2011–ல் மனு அளித்திருந்தேன். பல நாட்களுக்குப்பின்னர், எனக்கு 2017 முதல் திண்டுக்கல் மாநகராட்சியால் ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருகிறது. எனது ஏழ்மை நிலையைத் தெரிவித்து, எனது தாயார் இறந்த 2011லிருந்து எனக்கு ஓய்வூதியம் அளிக்குமாறு மாநகராட்சியில் மனு அளித்து கேட்டுக்கொண்டும், எனக்கு 2017லிருந்து தான் ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருகிறது. எனது ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு எனது தாயார் காலமான வருடத்திலிருந்து (2011 முதல்) எனக்கு ஓய்வூதியம் கிடைத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) திண்டுக்கல் மாநகராட்சியைச் சேர்ந்த உதவியாளர் 23.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" திண்டுக்கல் மாநகராட்சியில் திரு.சுப்பன் என்பவரும், அவரது மனைவி மாரி என்பவரும் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து பணியிடையே காலமானார்கள். அவர்களது வாரிசுதாரரான செல்வி. S. தேவிகா என்பவர், அவரது தாயார் இறந்த 2011ல் இருந்து ஓய்வூதியம் கேட்டு மனு செய்திருந்தார். மனு அளித்த போது தேவையான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை அவரால் தர இயலவில்லை. பலமுறை ஆவணங்களை கேட்ட போது, கேட்கப்பட்ட ஆவணங்களை மொத்தமாக அளிக்காமல், கால இடைவெளியுடன் தனித்தனியாக சமர்ப்பித்தார். 2017ம் ஆண்டில்தான் வருமான சான்றிதழுடன் அனைத்து ஆவணங்களையும் மனுதாரர் அளித்ததால், அவருக்கு 2017 முதல் ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருகிறது. உள்ளாட்சி தணிக்கைத் துறையின் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வரும் நிலையில், மனுதாரரின் கோரிக்கை குறித்து உள்ளாட்சி தணிக்கைத் துறைக்கு தெரியப்படுத்தி, அதன் மீது உரிய நடவடிக்கை எடுத்திட மாநகராட்சியால் ஆவன செய்யப்படும் " என்று தெரிவித்துள்ளார்.

மேலும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர்(பொ), உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறைக்கு அனுப்பியுள்ள தனது 24.05.2022 நாளிட்ட கடிதத்தில், செல்வி S.தேவிகா என்பவருக்கு 07.11.2011 முதல் ஓய்வூதியம் அனுமதிப்பதற்குரிய விதிமுறைகளை தங்கள் அலுவலகத்திலிருந்து பெற்று அனுப்பி வைக்கும்படி விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் விரிவான குறிப்பினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், திண்டுக்கல் மாநகராட்சி உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனக்கு 2017 முதல் ஓய்வூதியம் அளிக்கப்படுவதாகவும் அதனை தனது தாயார் இறந்த ஆண்டான 2011லிருந்து வழங்குமாறு கோரியுள்ளார்.

திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப்பணியாளராக பணிபுரிந்து பணியிடையே காலமான திரு.சுப்பன் மற்றும் அவரது மனைவி திருமதி. மாரி இருவரின் வாரிசுமான செல்வி. தேவிகா தனது தாயார் இறந்த 2011ல் ஓய்வூதியம் வழங்க கோரியிருந்தாலும் மாநகராட்சியில் கேட்கப்பட்ட ஆவணங்களை ஒட்டுமொத்தமாக சமார்ப்பிக்காமல் தனித்தனியாக சமர்ப்பித்துள்ளார். 2017ம் ஆண்டில் தான் வருமான சான்றிதழுடன் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் அவருக்கு 2017 முதல் ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருகிறது.

செயற்பொறியாளர் மற்றும் ஆணையர் (மு.கூ.பொ), திண்டுக்கல் மாநகராட்சி அவர்கள் இயக்குநர் உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை, சென்னைக்கு எழுதியுள்ள 24.05.2022 நாளிட்ட கடிதத்தில் செல்வி.S.தேவிகா என்பவருக்கு 2017–லிருந்து ஓய்வூதியம் வழங்கியதற்கு பதிலாக 07.11.2011 முதல் ஓய்வூதியம் அனுமதிப்பதற்குரிய விதிமுறைகள் அடங்கிய குறிப்பினை பெற்று அனுப்பி வைக்கும்படி கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே உள்ளாட்சி நிதி தணிக்கைதுறை அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் உரிய விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுத்திட திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) செல்வி. S. தேவிகா,
56, முனிசிபல் காலனி,
நெட்டுத்தெரு,
திண்டுக்கல் – 624 001.

2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

3) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்